www.tamilarangam.net

# 'மக்கள் விரோதச் செயல்கட்கு எமது பெயரா?

விடுதலை 3.11.86

# விடுதலைப் புலிகள் பெரும் வேதனை

## சிங்கள ராணுவத்தினர் அட்டூழியம்; அகதிகள் கடத்தல்; 6 தமிழ் மகளிர் கற்பழிப்பு

சென்னை, நவ. 3- பல்வேறு குழுக்களின் சமூக விரோத நடவடிக்கைககளை தமது பெயரில் வெளியிட்டு- தயை கூர்ந்து தமது இயக்கத்தினை மாசுபடுத்த வேண்டாமென 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுதொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் பிரிவைச் சார்ந்த எஸ். சுப்பிரமணியம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

மாசு கற்பிக்காதீர்கள்

''விடுதலைப் புலிகள் என்பது L. T. T. E. (லிபரேஷன் டைகர்ஸ் ஆப்ஃ தமிழ் ஈழம்) என்பதை மட்டுமே குறிப்பதாகும். இந்நிலையில் பல்வேறு குழுக்களின் சமூக விரோத நடவடிக்கைகளை 'விடுதலைப் புலிகள்' என்ற பெயரில் வெளியிடுவது எமது இயக்கத்திற்கு மாசு கற்பிப்பதாக உள்ளது. எனவே சம்பந்தப்பட்ட குழுக்களின் நடவடிக்கைகள் தொடர்பாக -அக்குழுக்களின் பெயர்களையே பாவிக்குமாறும் -தமிழீழ விடுதலைப்புலிகள்பற்றிய செய்திகளை மட்டும் விடுதலைப் புலிகள் என்ற பெயரில் வெளியிடுமாறும் தாழ்மையுடன் தமிழக ஏடுகளை வேண்டிக் கொள்கிறோம்."

### சிங்கள ராணுவம் தாக்குதல்; இருவர் சாவு

31.10.86

சென்னை, அக். 30— யாழ்ப்பாணம் கோட்டை ராணுவ முகாமிலிருந்து சிங்கள ராணுவத்தினர் குறு ரக பீரங்கிகளை கொண்டு நடத்திய தாக்குதலில் இருவர் மாண்டனர். யாழ்ப்பாண மருத்துவமனை ஒரு பகுதி சேதமடைந்துள்ளது.

புதனன்று மதியம் நடந்த இச்சம்பவத்தில் மேலும் 5 பெண்கள் உட்பட 23 பேர் காயமடைந்துள்ளனர் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு சார்பில் வியாழன்று சென்னையில் தெரிவிக்கப்பட்டது.

## பிரபாகரன் கைது ஆயுதங்கள் பறிமுதல்

# தமிழ் ஈழ மக்களுக்கு இழைக்கப்பட்ட அவமானம்

தினமணி 10/11/86

## விடுதலைப் புலிகள் அறிக்கை

சென்னை, நவ. 10. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை கைது செய்து, ஆயுதங்களை பறிமுதல் செய்தது தமிழ் ஈழ மக்களுக்கு இழைக்கப்பட்ட அவமானமாக கருதுகிறோம் என்று தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தின் சார்பில் அறிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை (8ந் தேதி) தமிழகப் போலீசார் விடுதலை இயக்கங்கள் மீது எடுத்த நடவடிக்கைகள் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

புலிகள் இயக்கம் மீது எடுக்கப்பட்ட இக் கடும் நடவடிக்கை தமிழீழ மக்களின் விடுதலை லட்சியத்தை வெகுவாகப் பாதிக்கும் என நாம் கருதுகிறோம்.

இனவாத சிங்கள அரசானது தமிழ் மக்களுக்கு எதிரான, இனப் படுகொலை நடவடிக்கைகளை தொடர இது ஊக்கமளிப்பதாக அமையும். இந் நடவடிக்கையானது சிங்கள ராணுவத்திற்கு தார்மீக ஊக்கம் அளிப்பதோடு அப்பாவித் தமிழ் மக்களுக்கு எதிரான ராணுவ நடவடிக்கைகளையும் தூண்டுவிக்கும்.

தமிழ்ப் போராளிகளை கைது செய்து அவர்களது ஆயுதங்களைப் கைப்பற்றிய இந்த நடவடிக்கைகளுக்கு எந்தவிதமான விளக்கம் தந்தாலும் எம்மைப் பொறுத்த வரை இது ஜெயவர்த்தனாவை மகிழ்விக்க எடுத்த நடவடிக்கையாகவே நாம் கருதுகிறோம். மனித குலமே வெட்கித் தலை குனியும் படியாக இனப் படுகொலை புரியும் இனவாத அரசின் பிரதிநிதியாகிய ஜெயவர்த்தனாவை வரவேற்பதற்காக அநாதரவான ஒடுக்கப்படும் மக்களின் பாதுகாப்புக்காக போராடும் எமது விடுதலை இயக்கம் அவமானத்திற்கும், இழிவுக்கும் ஆளாக்கப்பட்டுள்ளது.

எமது விடுதலை இயக்கம் மிகவும் கட்டுப்பாடான ஓர் அமைப்பு. இந்த நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நாம் மிகவும் மதித்து வந்துள்ளோம்.

முன்கூட்டியே எமக்கு எச்சரிக்கை விடுத்திருந்தால் நாமாகவே இந் நாட்டை விட்டு வெளியேறி இருப்போம்.

ஆனால் எமது தலைவர் பிரபாகரனை கைது செய்து, விசாரணை செய்து, புகைப்படம் எடுத்து தடுப்புக் காவலில் வைத்து ஒரு குற்றவாளிபோல் நடத்திய போலீசாரின் இந்த நடவடிக்கை, தமிழீழ மக்களுக்கு செய்யப்பட்ட அவமானமாகவே நாம் கருதுகிறோம்.

இப்படியான நாகரீகமற்ற நடவடிக்கைகளுக்கு தமிழகப் போலீசாரே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் சுப்பிரமணியம் அறிக்கைவிடுத்துள்ளார்.

# சென்னைக் கலவரம்; நெடுமாறன் அறிக்கை

விடுதலை - 5/11/86

சென்னை, நவ. 5-

தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை:

சென்னை-சூளைமேட்டில் ஈழப் போராளி இயக்கம் ஒன்றினைச் சேர்ந்தவர்கள் சுட்டதால் ஒருவர் இறந்து, பலர் காயமடைந்த நிகழ்ச்சி கண்டு வேதனையடைகிறேன். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எனது அனுதாபத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த நிகழ்ச்சிக்குப் பொறுப்பானவர்கள் யாரோ? அவர்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தமிழக மக்கள் நடுவில் உருவாகியுள்ள இந்த உணர்வைச் சிதைக்கவும், போராளிகளின் மீது களங்கம் கற்பித்து அதன் மூலம் தமிழக மக்களிடம் அவர்களுக்குள்ள ஆதரவை அழிக்கவும் சில சக்திகள் ஓயாமல் முயற்சி செய்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் பொறுப்புணர்வுடனும், எச்சரிக்கையுணர்வுடனும், செயல்பட வேண்டிய கடமை அனைத்துப் போராளிகளின் இயக்கங்களுக்குண்டு.

உயிரைத் துச்சமாக மதித்து, சிங்கள ராணுவத்தை எதிர்த்து, களத்தில் போராடி ரத்தம்சிந்திக்கொண்டிருக்கும் உண்மையான போராளிகளுக்கும், சொல்லொணாத கொடுமைக்குள்ளாகித் தவிக்கும் தமிழீழ மக்களுக்கும், பொறுப்பற்ற இயக்கங்கள் இத்தகைய செயல்களின்மூலம் துரோகம் செய்கின்றன. எனவே கட்டுப்பாடும் பொறுப்புணர்வு மற்ற இயக்கங்களை அவற்றின் தலைவர்கள் தாமாகவே கலைத்து விடுவது நல்லது.

இத்தகைய இயக்கங்களைத் தமிழக மக்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். தமிழ் ஈழ விடுதலை ஒன்றை மட்டுமே இலட்சியமாகக் கொண்டு கட்டுப்பாட்டுடனும், தியாக உணர்வுடனும் செயல்படும் இயக்கத்திற்கு மட்டுமே இனி ஆதரவு தந்து தமிழீழப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உதவும்படி தமிழக மக்களை வேண்டிக் கொள்கிறேன்.

-இவ்வாறு நெடுமாறன் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

## தஞ்சம் கொடுத்த மண்ணில் தான்தோன்றிதனமாக நடப்பதா?

# சென்னை துப்பாக்கி சூடு: விடுதலைபுலிகள் அறிக்கை

சென்னை, நவ. 6:

சென்னை சூளைமேட்டில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் நடத்திய துப்பாக்கி சூடு குறித்து விடுதலைப்புலிகள் இயக்கம் அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் தெரிவித்துள்ளது.

தஞ்சம் கொடுத்த மண்ணில் தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதா? என்றும் அவர்கள் இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழ் விடுதலைப்புலிகள் இயக்க அரசியல்பிரிவு தலைவர் எஸ். சுப்பிரமணியம் இதுகுறித்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

துப்பாக்கி சூட்டில் அநியாயமாக உயிர் நீத்த இளைஞரின் குடும்பத்திற்கு இதயபூர்வ அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதாக அவர் கூறியுள்ளார்.

இந்த மக்கள் விரோத சம்பவத்திற்கு காரணமாக இருந்தவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு நெருக்கடியான கட்டத்தை எதிர்நோக்கியுள்ளது. தமிழீழ மக்கள் தமது விடுதலைக்காக ஒரு ஜீவ மரணப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். எங்களது விடுதலை இயக்கம் தனித்து நின்று சிங்கள ஆயுதப்படையுடன் போராடி வருகிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழக மக்கள், மற்றும் உலக மக்களின் ஆதரவையும் அனுதாபத்தையும் பெற வேண்டி நிற்கும் இந்த இக்கட்டான சூழ்நிலையில் கட்டுப்பாடும், ஒழுக்கமும், விடுதலை உணர்வும் அற்ற சில ஈழ விடுதலை அமைப்புகளின் மக்கள் விரோத நடவடிக்கைகள் எங்களது விடுதலைப் போராட்டத்திற்கே மாசு கற்பிப்பதாக உள்ளது. இவர்களது சமூக விரோத நடவடிக்கைகள் சென்னையில் மட்டுமன்றி தமிழ்நாட்டிலும் பரவி வருவது வேதனையை அளிக்கிறது. நமக்கு தஞ்சம் கொடுத்த தமிழ் மண்ணில் இவர்கள் தான்தோன்றிதனமாக நடந்து கொள்வதை மத்திய—மாநில அரசுகள் அனுமதிக்கக் கூடாது என்றும் எஸ். சுப்பிரமணியம் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களையெல்லாம் விடுதலைப்புலிகள் என தமிழ்நாட்டு பத்திரிகைகள் விவரிப்பது களங்கம் ஏற்படுத்துவதோடு மக்களையும் குழப்பத்தில் ஆழ்த்துவதாக முடியும். எனவே விடுதலைப்புலிகள் என்ற எங்களது விடுதலை இயக்கத்திற்கும், எங்களது சுதந்திர போராட்டத்திற்கும் தொடர்ந்து அனுதாபமும் ஆதரவும் தருவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம் என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க அரசியல் பிரிவு தலைவர் எஸ். சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

---

## விடுதலைப்புலிகள் வைத்த -

# கண்ணி வெடியில் சிக்கி 18 சிங்கள வீரர்கள் பலி

சென்னை, நவ. 10.

விடுதலைப்புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிக்கி 18 சிங்கள ராணுவத்தினர் பலியானார்கள்

இதுகுறித்து சென்னையில் உள்ள தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

### கண்ணிவெடி

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் ராணுவ முகாமில் இருந்து ஆலங்குளம் ராணுவ முகாமுக்கு சிங்கள ராணுவத்தினர் 'டிரக்' ஒன்றில் சென்று கொண்டு இருந்தார்கள்.

இதை அறிந்த விடுதலைப் புலிகள், பெரியகட்டு, பனியங்குளம் ஆகிய இடங்களுக்கு இடையில் கண்ணி வெடிகளை புதைத்து வைத்தனர்.

### 18 பேர் பலி

சிங்களராணுவத்தினர் அந்த இடத்தை கடக்கும் போது கண்ணிவெடி வெடித்ததில், 'டிரக்' வண்டியில் இருந்த 25 ராணுவத்தினர்களில் 18 பேர் அதே இடத்தில் உடல் சிதைந்து செத்தார்கள். மற்றவர்கள் காயம் அடைந்தனர். 'டிரக்' வண்டி முழுவதும் சுக்குநூறானது.

### தாக்குதல்

இந்த கண்ணிவெடி தாக்குதலால் ஆத்திரம் அடைந்த சிங்கள ராணுவத்தினர் விடுதலைப்புலிகளுக்கு எதிராக பீரங்கி மற்றும் துப்பாக்கி தாக்குதல் நடத்தினார்கள்.

எனினும் விடுதலைப்புலிகள் வெற்றிகரமான பதில் தாக்குதல் நடத்தி, எவ்வித இழப்பும் இன்றி தங்களது முகாமுக்கு திரும்பினார்கள்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்